# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 194/2019

Deposition of witness for P.W.8

| | |
|---|---|
| Name | திரு. கணேசன் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.09.2022

<u>முதல் விசாரணை</u>

நான் பாளையங்கோட்டை, சமாதானபுரம், திருவள்ளுவர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். நான் லாரி, ஜேசிபி டிரைவர் ஆவேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்பவரை தெரியும். நான் ஆபருக்காக 21.01.2017 ஆம் தேதியன்று TN69 C 6399 என்ற ஜேசிபி வாகனத்தில் நான் மட்டும் காலை 9.00 மணிக்கு திருநெல்வேலியில் என் வாகனத்தை எடுத்துவிட்டு, தாதன்குளம் போகும் ரோட்டில் உள்ள அய்யனார் குளம்பட்டி என்ற ஊரில் ஒரு ஆபர் இருப்பதாக, எனக்கு போனில் தகவல் வந்தது. பார்ட்டிக்காரர்கள் உடைமரங்களை எடுப்பதற்கு எனக்கு தகவல் கொடுத்தார்கள். அதன்படி வண்டியை எடுத்துக்கொண்டு, திருநெல்வேலி–திருச்செந்தூர் சாலையில் செய்துங்கநல்லூர் சென்று அய்யனார்குளம்பட்டி செல்லும் சாலையில் போனேன். அப்போது அந்த ரோட்டில் R.V.S. தோட்டம் பக்கத்தில் லோடு வண்டி நின்றது, அதிலிருந்து 3 பேர்கள், செல்வகுமாரை வெளியே இழுத்துப்போட்டு வெட்டிக்கொண்டிருந்தார்கள், எனவே நான் வண்டியை நிறுத்தினேன். எனது வண்டியிலிருந்து இறங்கி போவதற்கு நான் முயற்சி செய்தபோது, அங்கிருந்த 2 பேர்கள் வெட்டிவிடுவேன், வண்டியை எடுத்துவிட்டு போ என்று அரிவாளை

வைத்து மிரட்டினார்கள். நான் எனது வண்டியை எடுத்துவிட்டு, தாதன்குளம் பாதைக்கு மீண்டுமாக எனது ஊருக்கு போய்விட்டேன். ஆஜர் எதிரிகளை சரியாக தெரியவில்லை. வெட்டிய ஆட்களை தற்போது 5 வருடம் ஆகிவிட்டதால் எனக்கு தெரியவில்லை. வெட்டிய அரிவாளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற 2 அரிவாள்களில் (சொத்துபட்டியலில் காட்டப்பட்டுள்ள வரிசை எண். 17)ல் உள்ள சா.பொ.13 அரிவாள் இரத்தக்கறையுடன் பயன்படுத்தியதாகும். போலீசார் 2,3 மாதங்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்தார்கள். அங்கு வைத்து விசாரித்தார்கள். அதன்பிறகு திருச்செந்துார் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரப்பெற்று, அங்கு சென்றேன். அங்கு நீதிமன்றத்தில் தனியாக விசாரித்து வாக்குமூலம் கொடுத்துள்ளேன். அந்த சம்மன் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது, அதற்கு என்னுடைய அடையாளத்தை காட்டுவதற்கு என்னுடைய ஓட்டுநர் உரிமத்தின் நகல் கொடுத்துள்ளேன். நான் திருச்செந்துார் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது, அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது அது அ.சா.ஆ– 17 ஆகும். அந்த வாக்குமூலத்தில் யார் யார் என்ன என்ன அரிவாள் வைத்திருந்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்பது ஞாபகமில்லை. மறுபடியும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (3 ம் எதிரிதரப்பில்)</u>

எனக்கு சொந்தமாக ஜேசிபி வண்டி கிடையாது என்றால் சரிதான். ஜேசிபி வாகனத்தை ஓட்டுவதற்கு சிறப்பு பயிற்சி மற்றும் சிறப்பு உரிமம் வேண்டும் என்றால் சரிதான். நான், யாரிடமிருந்து ஜேசிபி வாகனத்தை 21.01.2017 அன்று வாடகைக்கு எடுத்தேன் என்று நான் போலீஸ் விசாரணை மற்றும் திருச்செந்துார் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்படி சொல்லாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் கிடையாது. ஜேசிபி வாகனங்களை பொறுத்தவரை, யாரேனும் தனிப்பட்ட முறையில் அழைத்தால்தான், அவர்கள் அழைத்த இடத்திற்கு செல்வேன் என்றால் சரிதான்.

21.01.2017 அன்று யார், என்னை அழைத்தார்கள் என்ற பெயர் எனக்கு தெரியாது. 21.01.2017 அன்று நான் போனதாக சொல்லக்கூடிய ஆபருக்கு ரேட் எவ்வளவு என்ற விவரமும் எனக்கு தெரியாது. என்னை போனில் கூப்பிட்டதாக சொல்கின்ற வேலையில் என்னை யார் எந்த அழைப்பேசியிலிருந்து அழைத்தார் அதன் விவரம், மற்றும் எனது அழைப்பேசியின் விவரத்தை போலீசார் விசாரணையிலோ, நீதிமன்ற வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். திருநெல்வேலியில் உள்ள எனது நண்பர் மைதீன் பாய் என்பவரை எனக்கு தெரியும். எனக்கு மதுஅருந்தும் பழக்கம் உண்டு. மைதீன் பாய்க்கு கிடையாது. மைதீன் பாய் என்பவர் ஓரளவிற்கு போலீசாருடன் பழக்கம் வழக்கம் வைத்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி வெங்கடேசன் சார் என்பவர் எனக்கு தெரியாது. நான் தாதன்குளம் போய்விட்டு, எனது ஊரான திருநெல்வேலிக்கு சென்றுள்ளேன் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு திருநெல்வேலிக்கு செல்ல வேண்டுமென்றால் கருங்குளம், அதன்பின்னர் செய்துங்கநல்லூர், கிருஷ்ணாபுரம் கடந்துதான் திருநெல்வேலிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். செய்துங்கநல்லூர் காவல்நிலையம் என்பது ஊரின் மெயின் பகுதியில் உள்ளது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தை கடந்து போகும் போது கூட நான் பார்த்ததாக சொல்லக்கூடிய விசயத்தை போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வெளியே யாரிடமும் அதுகுறித்து சொல்லவும் இல்லை என்றால் சரிதான். போலீசார் எனது வீட்டிற்கு மைதீன் பாய் மூலமாக வந்தார் என்றால் சரியல்ல. அவர்கள் எவ்வாறு, மற்றும் எந்த அடிப்படையில் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் திருச்செந்தூர் நீதிமன்றத்திற்கு சென்று வாக்குமூலம் கொடுத்தது எனக்கு முதல்முறை என்பதால், அங்கு எவ்வாறு சாட்சியமளிக்க வேண்டும் என்று போலீசார் சொல்லிக்கொடுத்தார்களா என்றால் போலீசார் என்னுடன் வரவில்லை. எனது நண்பர் மைதீன் பாய் என்பவருக்கும், ஆய்வாளர் வெங்கடேசன் என்பவருக்கும் நன்கு பழக்கம் என்பதால், அதன் மூலமாகத்தான்

நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டேன் என்றால் அவர்கள் பழக்கம் குறித்து எனக்கு தெரியாது. இறந்துபோனவர் செல்வகுமார் என்பதும் எனக்கு போலீசார் சொல்லிதான் தெரியும். நான் இந்த வழக்கில் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பார்த்த சாட்சியாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருநெல்வேலிருந்து காலை 9.00 மணிக்கு ஜேசிபி வாகனத்தை எடுத்து வந்ததாக சொல்வதும், மேலும் அய்யனார்குளத்திற்கு ஆபருக்காக வந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் கருங்குளம் தாண்டி போகும்போது மணி 12.00, 12.15 மணி இருக்கும். அப்பொழுது போலீசார் யாரும் ரோட்டில் இல்லை. நான் உண்மையிலேயே வழக்கில் சாட்சியாக இருந்திருந்தால், அப்பொழுதே போலீசில் சொல்லியிருப்பேன் என்றும், நான் சாட்சியாக இல்லை என்பதால்தான் போலீசில் சொல்லவில்லை என்றுசொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை பொறுத்தவரை பின்னிட்டு உருவாக்கப்பட்ட பொய் சாட்சி என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதைதான், போலீஸ் விசாரணையின்போதும், நீதிமன்ற விசாரணையின்போதும், திருச்செந்தூர் நீதிமன்ற விசாரணையின்போதும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம் விதத்தில் பட்டாபிராமன் மண்படம் பக்கத்திற்கு வந்ததாக சொல்வதும், அங்கே பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள்கள் சந்தையில் எளிதாக கிடைக்ககூடியது என்றால் சரிதான். நான் இந்த நீதிமன்றத்தில் அரிவாளில் இரத்தக்களை படிந்ததாக சொல்வதும், போலீசார் சொல்லிதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சியம் சொல்வதற்காக சுமார் 5 முறை ஸ்ரீவைகுண்டம் வைத்திருப்பேனா என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், ஸ்ரீவைகுண்டம் ஆய்வாளர், மற்றும் மைதீன் ஆகியோர்களால் உருவாக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. என்மீது எந்த குற்றவழக்குகளும் இல்லை. நான் தற்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள வாகனத்தின் பதிவு எண் உட்பட எந்த விவரத்தையுமே போலீஸ்

விசாரணையிலோ, மேலும் இதற்கு முன்னர் திருச்செந்தூர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சொல்லாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் கிடையாது. பொதுவாக ஜேசிபி வாகனத்திற்கு டிரிப் சீட் பயன்படுத்தப்படும். ஆனால் அன்று நான் வைத்திருந்த டிரிப் சீட்டை போலீசார் விசாரணையின்போது கொடுக்கவில்லை. நான் உண்மையிலேயே ஜேசிபி கிடையாது என்றும், உண்மையிலே ஜேசிபி டிரைவராக இருந்திருந்தால், போலீசார் விசாரணையின்போது ஜேசிபி ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் மற்றும் டிரிப் சீட்டை கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் யாரிடம் ஜேசிபியை வாடகைக்கு எடுத்தேன் என்றும், அதனுடைய உரிமையாளர் விவரத்தை எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் உண்மையில் சம்பவத்தை பார்த்திருந்தால், உடனடியாக போகுகின்ற வழியில் உள்ள காவல்நிலையத்தில் சொல்லியிருப்பேன் என்றும், நான் பார்க்கவில்லை என்பதால்தான் எனது தரப்பில் காவல்நிலையத்தில் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை போன் மூலமாக ஆபருக்கு அழைத்ததாக பொய்யாக சொல்கிறேன், உண்மையில் என்னிடம் செல்போன் இருந்திருந்தால் அந்த விவரம் குறித்தும் என்னை அழைத்த செல்போனின் விவரம் குறித்தும் நான் போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. ஜேசிபி போன்ற வாகனத்தை சரியாக மையிலேஜ் கிடைக்காது என்றால் சரிதான். அதனால் ஆபர் மற்றும் ரேட்டை பேசிவிட்டுதான் செல்ல வேண்டும் என்று எனக்கு தெரியும். ஆனால் 21.01.2017 அன்று எந்தவித அடிப்படையும் இல்லாமல் ஏன் போனேன் என்று எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்ட சாட்சி என்றும் எனது சாட்சி பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை 4,5 எதிரிகள்தரப்பில் 3ம் எதிரியின் குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை மூத்த வழக்கறிஞர் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் வேறு வழக்கிற்காக சென்றதால் முன்னிலை இல்லை என்பதால் பின்னர் மனு செய்து குறுக்குவிசாரணை செய்யவேண்டுமாறு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்பட்டது.